பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 18 ஞாயிற்றுக்கிழமை (4-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 328

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

# புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைக்காகப் போராடுகின்றார்!

## மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கா உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரனைக் கைதுசெய்வதோ அல்லது தேடிப்பிடிப்பதோ இலகுவான காரியமல்ல. இவ்வாறு முன்னாள் பிரதிசபாநாயகரும் இராணுவ மேஜர் ஜெனரலுமான சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்:

மாவத்தகமவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கடந்த இருபது வருடங்களாக விடுதலைப்புலிகள் இயக்கமும் அவ்வியக்கத்தின் தலைவர் பிரபாகரனும் விடுதலைக்காகப் போராடி வருகின்றனர். பிரபாகரனைக் கைது செய்வோமென யாராவது கூறினால் அது பகற்கனவேயாகும்.

புலிகளால் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் ஆயிரத்திற்கும் மேற்பட்டபடையினர் உயிரிழந்துள்ளனர். எனினும்அவர்களின் குடும்பங்களுக்கு எந்தவித இழப்பீடுகளோ

(8 ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சிக்காலம் - நவம்பர்

# முக்கியதலைவர்கள் இலக்கு தற்கொலைபடை ஊடுருவல்

## கொழும்பு மாநகரில் படையினர் உசார்

(நமது நிருபர்)

**எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன் முக்கிய அரசியல் தலைவர்களை இலக்கு வைத்து தலைநகர் கொழும்பில் பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையணிகள் பல பிரிவுகளாக நகருக்குள் ஊடுருவியிருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

**சுமார் 50 தற்கொலையாளிகள் ஊடுருவியிருக்கலாம் என்றும் புலனாய்வுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது**

டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் முக்கிய அரசியல் தலைவர்களை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் முயற்சிசெய்து வருவதாக நம்பகரமான தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளுக்கு முக்கியமான தொருமாதமாக இருப்பதால்

(08 ம் பக்கம் பார்க்க

## தேர்தல் வன்முறைகள் 240 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

தேர்தல்பிரசாரம் நாடெங்கும் சூடு பிடித்து வரும் அதேவேளை தேர்தல் வன்முறைகளும் அதிகரித்து வருகிறது.

நேற்றுவரை 240 தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றிருப்பதாக பொலிஸ் தலைமையகத்தில் உள்ள தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு பணியகத்தகவல்கள் தெரிவிக்கின்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பட்டலந்தை சித்திரவதை முகாமில் வைத்து 1988 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சட்டத்தரணி விஜயதாசலியன ஆராட்சி கொடூரமாக கொலைசெய்யப் பட்டமைக்கு ஐக்கியதேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் உடந்தை என கொலை செய்யப்பட்ட சட்டத் தரணியின் சகோதரர் கொழும்புபிரதம நீதியரசருக்கு கையளித்துள்ள

(8 ம்பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் தலைவர் நாடு திரும்புவார்!

(கொழும்பு)

தற்போது லண்டனில் தங்கியுள்ள மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாடு திரும்பவுள்ளதாக ஜே. வி. பி. வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் ஜே. வி. பி நடத்தியபேச்சுவார்த்தையை அடுத்து அவர் டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன் நாடு திரும்பவுள்ளார்.

(8 ம் பக்கம் பார்க்க)

# புளொட் உறுப்பினர் இருவரையும் ரெலோவே சுட்டுக்கொன்றது?

## புளொட் வட்டாரங்கள் தகவல்

[வவுனியா]

வவுனியாவில் நேற்று முன்தினம் தமது கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களை ரெலோ அமைப்பினரே சுட்டுக் கொன்றதாகவும் இக்கொலைச் சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றும் புளொட் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் வவுனியாவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் புளொட் அமைப்பைச் சேர்ந்த சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ரீ சசிகரன் [பிரதாப் வயது 22], சாந்தன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை ரெலோ உறுப்பினர்கள் இருவரை நேற்றுக் காலை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வைத்து புளொட் உறுப்பினர்கள் கடத்தியுள்ளதாக ரெலோ அமைப்பினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா புளொட் இயக்க பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் தமது உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக இரு ரெலோ உறுப்பினர்களை தாம் கைது செய்துள்ளதாகவும், விசாரணைகளின் பின் அவர்களைப் பொலிசாரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். [ந-4]

## 20 ஆம் திகதி தபால்மூலம் வாக்களிப்பு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பு இம்மாதம் 20 ம் திகதி நடைபெறும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அடுத்த வாரம்முதல் மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் திணைக்களம் அனுப்பிவைக்கவுள்ளது. (வ)

## சங்கிலியனபடை துண்டுப்பிரசுரம்

(மன்னார்)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக சங்கிலியன் படை துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரம் மன்னாரிலுள்ள சகல திணைக்களங்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் சுவரொட்டிகளாகவும் ஒட்டப்பட்டிருப்பதாக மன்னார்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

## திவயின அலுவலகத்தில் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வெளிவரும் திவயின பத்திரிகைக்காரியாலயத்திலிருந்து கைக்குண்டொன்று பொலிசாரால் நேற்று மீட்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ந-4)

## சிங்கள கிராமவாசிகள் இடப்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள தட்டான் குளம் பகுதியில் உள்ள சுமார் 2000 சிங்கள கிராமவாசிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கிராமத்தில் இருந்த இராணுவ முகாம் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப் பட்டுள்ளதை அடுத்தே இங்குள்ள கிராமவாசிகள் அம்பாறை சேனநாயக்காவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர் (ந-4)

## டாக்டர்களுக்கு அலவன்ஸ் நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் பணியாற்றும் அரச மருத்துவர்களுக்கான விசேட அலவன்ஸை சுகாதார அமைச்சு நிறுத்தியுள்ளது. இதனை ஆட்சேபிக்கும் விதத்தில் வடக்கு கிழக்கில் பணியாற்றும் டாக்டர்கள் நவம்பர் 7 ம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகஅரச மருத்துவர் சங்கச்செயலாளர் டாக்டர் பாதெனிய நேற்று முன்தினம் தெரிவித் தார்.

## படைத்தரப்பில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மணலாற்றில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தின் பின்னர் மூன்று பேரை ஆயுதங்களுடன் படையினர் கைதுசெய்துள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-4)

## சிறு விளம்பரம்

### (O/L) கணிதம் 2001

36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைவதற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புக்களும் 20 நாட்களில் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை சுண்டுக்குளி. (3909)

### படிவம்

இலங்கை விஞ்ஞான சேவை வகுப்பு 11 தரம் 11 ற்கு ஆட்சேர்பதற்கான படிவம் விற்பனையாகின்றது. விபரம் பார்வையிடலாம். நாயகபாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். [3910]

# நாளை நமதாக வேண்டுமானால்
# சங்கம் அமைத்து எங்கள் தமிழைக் காக்க
# பல்கலை மாணவர்கள் முன்வர வேண்டும்
## முன்னாள் நீதிபதி அறைகூவி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எழில்சேர் தமிழ்மண்ணுக்கு இன்று வந்துள்ள நாசத்தைப் போக்குவதற்கு இந்த நாட்டிலே நடமாடுகின்ற இளைஞர் யுவதிகள் முன்வர வேண்டும்.

நாம் வாழ்கின்ற இடத்திலே வீழ்ந்து கிடக்கின்றதமிழர் பண்பாடு, கலை, கலாசாரம், வாழ்க்கை முறை முதலியவற்றை மீண்டும் தூக்கி நிறுத்துகின்ற பொறுப்பு இளஞ்சந்ததியையே சாரும். முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக நூலகக்கேட்போர்கூடத்தில் நடைபெற்ற போது நாளை நமதே எனும் தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் பொன் பூலோகசிங்கத்தின் அறிமுக வுரையைத் தொடர்ந்துஉரையாற்றிய நீதிபதி,

''மேடை தோறும் தமிழ் மொழி பற்றிபேசிக்கொண்டு வேற்று மொழியையும் வேற்றுக் கலாசாரத்தையும் பின்பற்றி வாழத் தலைப்பட்டால்தமிழன்வாழ்க்கைமுறை என்னவாகும்?

நாட்டிலே ஒழுக்கம் மிகக் கெட்டுப் போய்விட்டது. நாகரிகம் எவ்வாறு முன்னேறிச் சென்றாலும் போலி வேஷத்தில் நடமாடவே விரும்புகிறோம்.

ஆனால் 1956 இல் இந்த நாட்டில் ஒரு புரட்சி நடந்தது அன்று தேசிய உணர்வு அழிந்து விடக்கூடாது என்று பண்டாரநாயக்கா அகல் விளக்கு ஏற்றி வைத்த காரணத்தினால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியினால் அவர்கள் இன்றும்தேசிய உடையில் செல்கிறார்கள் தமது வாழ்க்கை நெறியை இன்னமும் கடைப்பிடிக்கிறார்கள்.

மண்ணை விட்டு ஓடுபவர்களால் தமிழை வளர்க்க முடியாது. இங்குவாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கொடூரமான ஆட்சியினாலே அடக்கப்பட்டு ஒடுக்கப் பட்டுக்கொண்டிருப்பதனால் விடுதலை சுதந்திரம் பற்றி சிந்திக்க முடியாதுள்ளது.

அதற்காக மூதாதையர் வாழ்ந்த வாழ்வை எண்ணாது அற்பமான சிந்தனைகளாலே ஆடம்பரமாகச் செலவு செய்வதா? நலிந்து போன மக்களை இனங்கண்டு உதவ வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மிகவும் பின்தங்கிச் செல்கிறது போதனா வைத்தியசாலை நிலைமையை விவரிக்கத்தேவையில்லை;

இந்த நிலையிலே நாளை நமதாக வேண்டுமானால் கல்வித்துறையில் சிந்தனை ஓட்டமுள்ள நாட்டுக்கு நல்லது செய்யும் ஒரு இளைஞர் கூட்டம்உருவாக வேண்டும்: கல்வியைக் கற்றுவிட்டு வெளியேறாமல் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கமொன்றை நிறுவி தமிழைக் காக்க முன்வாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். (உ-106)

## புதிய பங்குத் தந்தை கடமையேற்பு

(கொழும்புத்துறை)

பாஷையூர் பங்கின் புதிய பங்குத்தந்தையாக அருட்திரு எஸ். யேசுரட்ணம் அடிகளார் கடமையேற்றுள்ளார்.

இதுவரை பாஷையூர் பங்கின் பங்குத்தந்தையாக கடமை புரிந்த அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் யாழ். ஆயரால் ஆயர் இல்லத்திற்கு இடமாற்றப்பட்டதையடுத்தே புதிய பங்குத் தந்தை கடமையேற்றுள்ளார். (உ-223)

## வாகனம் நிறுத்தத் தடை

(வரணி)

வரணி, கொடிகாமம் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் முன்பும், வீதியோரங்களிலும் சைக்கிள் மற்றும் வாகனங்களை நிறுத்துவதை இராணுவத்தினர் முற்றாகத் தடை செய்துள்ளனர்

தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆங்காங்கே சைக்கிள், வாகனங்கள் நிறுத்த வேண்டாம் என்ற வாசகங்கள் கொண்ட பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அண்மையில் குஞ்சர் கடைப் பகுதியில் சைக்கிள் கிளைமோர் வெடித்தமையால் மேற்படி நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது (எ-211)

## கௌரவிப்பு

(ஏழாலை)

முன்னாள் பிரதேச சபை தலைவரும் மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமான அமரர் சு. ஸ்ரீபாஸ்கரனின்உருவச்சிலைத்திறப்பு விழா மல்லாகத்தில் கடந்த புதனன்று நடைபெற்றபோது உருவச்சிலையை வடிவமைத்த சிற்பக்கலைஞர் சிவப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (உ-12)

## சைவ நெறி தேர்வு இன்று

(கொழும்புத்துறை)

யாழ். சைவபரிபாலன சபையின் இவ்வாண்டிற்குரிய சைவநெறித தேர்வு இன்று 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 63 ஆயிரத்து 137 மாணவர்கள் தோற்றவுள்ள இப்பரீட்சை 390 நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார். (உ-22-3-9)

## நான்கு தமிழ்க் கட்சிகளின்
# தூர நோக்கற்ற அரசியலே இன்றையஇன்னல்களுக்குகாரணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய இனத்தை அரசியல் வனாந்தரத்திற்கு இட்டுச்சென்றவர்கள் நான்கு தமிழ்க் கட்சிகளுமாவர். அது மட்டுமன்றி அவர்களது தூர நோக்கற்ற அரசியல் தீர்மானங்களும் முடிவுகளும் தான் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்கியது.

இவை அனைத்திற்கும் மேலாக அவர்களது தவறான அரசியல் போராட்டங்களினால் தமிழ் மக்கள் உயிர் அழிவுகளையும் உடமை இழப்புக்களையும் பாரிய இடப்பெயர்வுகளையும் சந்திக்க வைத்தது.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி. கா. செந்திவேல் கரவெட்டி மத்தியில் வேட்பாளர் க ஆனந்தகுமாரசுவாமி தலைமையில் இடம்பெற்ற தேர்தல் கருத்தரங்கில் உரையாற்றும்போது கூறினார்

அவர்மேலுங்கூறியதாவது;

தமது குறுகிய சுயநலன்களுக்காக இனவாதப் பிசாசுகளுடன் சமரசமாகி ஐக்கியம் பூண்டவர்களும் இதேதமிழ்க் கட்சிகள் தான் இத்தகைய அரசியல் போக்கிரித்தனம் புரிந்து தமிழ் மக்களை இன்னல்படுத்திய தமிழ் கட்சிகள் எந்த முகத்தோடு வாக்குக் கேட்டு நிற்கிறார்கள் என்பது புரியவில்லை.

கடந்தகால தமிழர் அரசியல் வரலாற்றை நேர்மையாகத் திரும்பிப் பார்க்கும் எந்தத் தமிழ் மக்களும் தமிழர் கூட்டணிக்கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

அதற்கு அப்பால் வெறும் போலித்தனமான ஐக்கியத்திற்கு தமிழ்மக்கள் வாக்களித்தால் கடந்த காலத்தைவிட மிக மோசமான விளைவுகளையே தமிழ்க் கட்சிகள் தேடித்தருவார்கள் என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும் என்றார். (உ)

# யாழ். ஆஸ்பத்திரியிலும் சுகாதாரச் சீர்கேடாம்
## பலரும் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலையில் உள்ள மலசலகூடங்களில் பெருஞ் சுகாதார சீர்கேடு நிலவுவதாக வைத்தியசாலைப் பணியாளர் மற்றும் நோயாளர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பற்சிகிச்சை நிலையத்திற்கு அருகில் உள்ள மலசல கூடத்தில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதாகவும் அப் பாதையின் ஊடாகவே பழைய நோயாளர் விடுதிப் பகுதிக்குச் செல்ல வேண்டியுள்ளதால் அவ்வழியே செல்லும் அனைவரும் மூக்கில் விரல் வைத்த படியே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சுகாதார சீர் கேட்டினை இல்லாமல் ஒழிக்க பாடுபட வேண்டிய யாழ். மருத்துவமனையில் இவ்வாறு சுகாதார சீர்கேடு நிலவுவது மனவருத்தம் தருமவிடயமாக உள்ளதாக அப்பகுதியில்கட்டட வேலையில் ஈடுபட்ட ஊழியர் மன வருத்தத்துடன் தெரிவித்தார். (உ)

## ஆலயம் சேதம் பூசை இல்லை

(துன்னாலை)

சில தினங்களுக்கு முன்னர் வடமராட்சி குஞ்சர் கடையடிப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பினால் சேதமடைந்த அங்குள்ள வைரவர் ஆலயம் இதுவரை பூசைகள் இல்லாது சேதமடைந்த நிலையிலேயே உள்ளது. (எ-41)

## பூங்கா திறப்பு

கோப்பாய்வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய சிறுவர் பூங்கா அமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இம்மாதத்தின் நடுப்பகுதியில் இது திறந்து வைக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (எ-79)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்டோபர் மாதம் 02ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 214208 பி | 214208 ஏ |
| 214317 ஏ | 214317 பி |
| 214668 ஏ | 214668 பி |
| 216007 ஏ | 216013 ஏ |
| 216013 பி | 216015 ஏ |
| 216061 ஏ | 216065 ஏ |
| 216065 பி | 216118 ஏ |
| 216216 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 173448 ஏ | 173790 ஏ |
| 175705 ஏ | 175705 பி |
| 175705 சி | 175705 ம |
| 189685 ஏ | 189685 பி |
| 195368 ஏ | 200664 ஏ |
| 205146 ஏ | 205146 பி |
| 205146 சி | 207222 ஏ |
| 207289 ஏ | 207296 ஏ |
| 207304 ஏ | 212164 ஏ |
| 212164 பி | 212164 சி |
| 212164 டி | 213184 ஏ |
| 213184 பி | 213299 ஏ |
| 213451 ஏ | 213451 பி |
| 213481 ஏ | 213551 ஏ |
| 213675 ஏ | 213675 பி |
| 213675 சி | 215393 ஏ |

| | |
|---|---|
| 215421 ஏ | 215425 ஏ |
| 215425 பி | 215425 சி |
| 215444 ஏ | 215475 ஏ |
| 215526 ஏ | 215526 பி |
| 215526 சி | 215560 ஏ |
| 215560 பி | 215589 ஏ |
| 215608 ஏ | 215608 பி |
| 215608 சி | 215627 ஏ |
| 215627 பி | 215658 ஏ |
| 215683 ஏ | 215683 பி |
| 215683 சி | 215687 ஏ |
| 215687 பி | 215687 சி |
| 215687 டி | 215708 ஏ |
| 215708 பி | 215761 ஏ |
| 215761 பி | 215761 சி |
| 215761 டி | 215789 ஏ |
| 215790 ஏ | 215792 ஏ |
| 215799 ஏ | 215799 பி |
| 215817 ஏ | 214817 பி |
| 215820 ஏ | 215821 ஏ |
| 215827 ஏ | 215848 ஏ |
| 217741 ஏ | 217741 பி |
| 217746 ஏ | 217747 ஏ |
| 217747 பி | 217757 ஏ |
| 217759 ஏ | 217760 ஏ |
| 217760 ஏ | 217760 சி |
| 217760 டி | 217762 ஏ |
| 217762 பி | 217801 ஏ |
| 217806 ஏ | 217806 பி |
| 217806 சி | 217810 ஏ |
| 217810 பி | 217810 சி |
| 217810 டி | 217814 டி |
| 217814 ஈ | 217827 ஏ |
| 217827 பி | |

(தொடரும்)


## திருமறைக் கலா மன்றம்

நடத்தும்

## கிறிஸ்மஸ் நாடகப் பிரதியாக்கப் போட்டி

1 ஆம் பரிசு 2000.00
2 ஆம் பரிசு 1000.00
3 ஆம பரிசு 500.00

கிறிஸ்து பிறப்பை மையப் பொருளாகக் கொண்டு சமகாலத்தை பிரதிபலிக்கும் கருவைக் கொண்ட 45 நிமிடத்துக்கு மேடையேற்றத்தக்கதாக நாடகம் அமைதல் வேண்டும்.

அனைவரும் பங்குபற்றலாம்.

முடிவுத் திகதி: 20-11-2001

திருமறைக் கலா மன்றம்.

238, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2393 (C-2813)

# விளையாட்டுத்துறையில்பொன்விழா

## காணும் ம. டேவிட் தம்பிராஜா

வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட ம டேவிட் தம்பிராஜா தனது விளையாட்டுத் துறையில்50வருடங்கள் பூர்த்தி செய்து இன்று தனது பொன்விழாவைக் காலை பத்து மணிக்கு,பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் மு திருநாவுக்கரசு, இளைப்பாறிய நீதிபதியும், தற்போதைய பதில் நீதிவான் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பி யாழ் வளாகம்,மற்றும் கப்டன் டீ ஏ.எம்.குணசிங்கம், தலைவர் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள எஸ்.மரியதாஸ் ஓய்வு பெற்ற முன்னாள் விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் வட-கிழக்கு மாகாண சபை தலைமையில் நடத்த யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

### சாதனைகள் பல

டேவிட் தம்பிராஜா, பல விளையாட்டுக்களில் சிறந்த வீரராகவும், மத்தியஸ்தராக பயிற்சியாளராகவும், நிர்வாகியாகவும், விரிவுரையாளராகவும் விளையாட்டுத்துறை சம்பந்தமான சில புத்தகங்களின் ஆசிரியராகவும் செயற்பட்டு இலங்கையிலும்,தென்னிந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும், ஜேர்மனியிலும் நம் மண்ணிற்கு மறக்க முடியாத புகழைத் தேடித் தந்துள்ளார். பல சாதனைகளைப் புரிந்துள்ள இவரை அனேகமான மக்கள் நன்கறிவர். இவர் இலங்கையில் பல தலை சிறந்த வீரர்களுடன் இணைந்து பல போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார்.

### விபரங்கள் வருமாறு:-

1. விளையாட்டுப் பயிற்சியாளர் விளையாட்டு வீரர் இலங்கை விமானப்படை

2. ஆளணி உதவியாளர் இலங்கைப் போக்குவரத்துச் சபை-விளையாட்டு வீரர்.

3. விளையாட்டு உத்தியோகஸ்தர்/பயிற்சியாளர் சிறிலங்கா விளையாட்டு அமைச்சு -விளையாட்டு வீரர்-உதைபந்தாட்டத் தலைவர்.

4. யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, திருமலை, அனுராதபுரம், பண்டாரவளை (தலைவர்) உதைபந்தாட்டக் கோஷ்டி.

5. துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், ஹொக்கி, நசர் பூப்பந்தாட்டம். குத்துச் சண்டைஜிம்நாஸ்டிக், தடகள விளையாட்டு வீரர்,

6. தற்காலிக விரிவுரையாளர் 1999, 2000 யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா கற்கை நெறி உடற்கல்வி, ஜிம்நாஸ்டிக் உதைபந்தாட்டம்.

7. உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் 1

8. உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், தடகளப் பயிற்சியாளர்.

9. தென் இந்தியா. பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உதைபந்தாட்டப் போட்டிகளில் பண்டாரவளை சன்றைஸ், திருமலை தெரிவுக் கோஷ்டிகளில் விளையாடியவர்.

10. உதைபந்தாட்டம், துடுப்பாட்டம பயிற்சிகள் மற்றும் உலகளாவிய விளையாட்டுகள் புத்தகங்களின் நூலாசிரியர்.

இவருடைய பொன் விழா சிறப்புற வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் வாசகர்கள் சார்பில் சமர்ப்பிக்கின்றோம் □

**சு. கிங்ஸ்லிகணேசன்**

# தீபாவளி நாளில் மக்கள் நலன் கருதி பிரார்த்தனைகளில் ஈடுபடுக!

## இந்துசமயப் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போர் காரணமாக எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வதிவிடங்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும், அங்கவீனர்களாகியும், உறவினர்களை இழந்தும் எமது சொந்தச் சோதரர்கள் வாழ்கின்றனர்.

இச்சூழ்நிலையில்எமது மக்களின் நலனிற்காகவும் நாடு வளம் பெற வேண்டியும் எதிர்வரும் தீபாவளி தினத்தில் பிரார்த்தனையில் அனைவரையும் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சி. சக்திகிரீவனால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீண்ட நெடுநாட்களாக நமது நாட்டில் இடம் பெற்று வரும் போர் ஒய்ந்து சாந்தி, சமாதானம், சம உரிமை கிடைக்க இறையருள் வேண்டிப்பக்தி எழுச்சிப் பிரார்த்தனை ஒன்றை நாடு பூராகவும் நடத்துமாறு சகல மக்களையும் மிகுந்த ஆராமையோடு கோருகின்றோம்.

அன்றைய தினம் உயிர்க் கொலைகளை நிறுத்தி மச்ச மாமிச பண்டங்களை உண்பதைத்தவிர்த்து தெய்வீக சிந்தையுள்ள நாளாகப் பேணிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அவரவர் தத்தம் வீடுகளுக்கு அருகிலுள்ள அகதி முகாம்களுக்கும், ஆதரவற்றோர் வாழும் சிறு குடில்களுக்கும் சென்று தம்மாலியன்ற இனிப்புப்பண்டம், உணவு, உடை போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு ஆறுதல்கூறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சகல ஆலயங்களிலும் ஸ்ரீருத்திர ஜெபம். திருத்தாண்டகப் பாராயணம் போன்றவற்றை மேற்கொள்ளுமாறும் இதற்கு சகல ஆலய பரிபாலன சபையினரும். ஆலய தர்மகர்த்தாக்களும்,ஆலய பூசகர்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்குறித்த பக்திப் பிரார்த்தனை சீரிய முறையில் நடைபெற சகல தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து பரிபூரணமான ஒத்துழைப்பை நல்கவேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். (உ)

## விசர்நாய் தடுப்பூசியும் உரிமத்தகடு வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கோண்டாவில் பிரிவில், கீழ்க்காணும் திகதிகளில் விசர் நாய்த்தடுப்பூசி கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் போடப்படவுள்ளது.

நாயொன்றுக்கு ரூபா 10 அறவிட்டு நாய் உரிமததகடும் அத்தினத்தில் வழங்கப்படும் எனவும் அறிவிககப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை, கோண்டாவில் வடக்கு மத்திய மருந்தக வீதி, கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா ச. ச. நிலையம, ஸ்ரீ கணேசா ச. ச. நிலையம்,

7 ஆம் திகதி புதன்கிழமை கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் ச. ச. நிலையம், குமரகோட்டம் ச. ச. நிலையம், புனித செபஸ்ரியார் கோவிலடி.

8 ஆம் திகதி வியாழக்கிழமை கோண்டாவில் கிழக்கு வேதபாராயண ச. ச. நிலையம், பாரதி வீதி அமரகவி ச. ச. நிலையம், மஞ்சத்தடி விவேகானந்தா ச. ச. நிலையம்.

9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோண்டாவில் மேற்கு உதயசூரியன் ச. ச நிலையம், கோண்டாவில் வடக்கு கலைவாணி ச. ச. நிலையம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ச. ச. நிலையம் ஆகிய இடங்களில் விசர் நாய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

நல்லூர் சென்ஜேம்ஸ் ஆலய வாலிபர் சங்கம் நடத்தும் விடுதலையின் ஒலி பெருவிழா இன்று பி.ப. 3.00 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தெளிவு சஞ்சிகையின் மூன்றாவது இதழ் அறிமுகமும், கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரையைப பொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும் இடம்பெறவுள்ளது. (உ)

## இளைஞர் தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்யசாயி இளைஞர் சபையினால், இன்றைய தினம் யா/ திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் இளைஞர்தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (உ)

# விளையாட்டு செய்திகள்

## 7000 ஒட்டங்களை பூர்த்தி செய்து இலங்கைகிரிக்கெட்அணித் தலைவர் சனத் சாதனை

(சார்ஜா)

இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூரியா சர்வதேச ஒரு நாள போட்டியில் 7 ஆயிரம் ஒட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளார்.

சார்ஜாவில்நடை பெற்று வரும் ஒரு நாள் போட்டித் தொடரிலேயே இச்சாதனையை புரிந்துள்ளார். இவர் 7 ஆயிரம் ஒட்டங்களைப் பூர்த்தி செய்தமூன்றாவது இலங்கை வீரராவர்.

இதற்கு முன் இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்தடி சில்வா 8 ஆயிரத்து 430 ஒட்டங்களையும் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க 7 ஆயிரத்து 456 ஒட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2-110)

## ஒருநாள் போட்டியில் பாக். அணி வெற்றி

(சார்ஜா)

சார்ஜாவில் நடைபெற்று வரும மூன்று நாடுகள் பங்கு பற்றும ஒரு நாள் போட்டித் தொடரில நேற்று முன்தினம் பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 272 ஒட்டங்களைப் பெற்றது.

பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 49.2 ஓவரில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 276 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இன்று நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் இலங்கை அணிகள விளையாட உள்ளன. (உ-2)

## மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பரம்பரம் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்துகிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

காலை 8 30 மணிக்கு கே. சீ சீ சீ. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துஜீ.கே. எஸ். சீ. விளையாட்டுக்கழகமும.

மு.ப. 10 00மணிக்குவிக்றி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆரியாலைகலைமகள வித்தியாலயமும.

மு.ப. 11.30 மணிக்கு பரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மரியன்னை விளையாட்டுக் கழகமும்.

பி.ப.1.30 மணிக்கு ரீ,சீ, எஸ் சீ.விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாளஸ்ஏ.பீ. விளையாட்டுக்கழகமும்,

பி.ப. 3.00 மணிககுபாரதி விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும.

பி.ப.5.00 மணிக்குசெங்குந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஏசியன் ஜங விளையாட்டுக் கழகமும மோதவுள்ளன.

இப்போட்டிகள்செங்குந்தா இந்துக்கலூரியில் நடைபெறவுள்ளன. (செ)

## கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் பதவி விலகினார்

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தலைவா பதவியில் இருந்து தான் விலகுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதி லியனகே அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே தான் பதவியிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பத்துவருடங்களுக்குமேலாக உபதலைவர் பதவியை வகித்து வந்த லியனகே முதல் தடவையாக கடந்த வருடம் தலைவராகத் தெரிசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## 69 லொறிகளில் வன்னிக்கு உணவுப் பொருள்

(கொழும்பு)

கடந்த 24 ஆம திகதிக்கும் 30 ஆம திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியூடாக, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும மீட்கப்படாத வவுனியாப் பிரதேசங்களுக்கு 69 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுளளன.

இதில் கிளிநொச்சிக்கு 16 லொறிகளிலும் முல்லைத்தீவுக்கு 38 லொறிகளிலும் மன்னாருக்கு 9 லொறிகளிலும் ஏனைய பகுதிகளுக்கு லொறிகளிலும் உணவுப் பொருட்கள அனுப்பபட்டுள்ளன.

அரிசி, பருப்பு. கருவாடு, எண்ணெய், சரக்குவகைகள் போன்ற பொதுமக்களுக்கு அவசியமான பொருட்களே இவ்வாறு அனுப்பப்பட்டன.

இதேவேளை, இப்பிரதேசங்களிலிருந்து 67 நோயாளிகள சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டனர். இவர்களுடன 23 உதவியாளர்களும் அனுப்பப்பட்டனர்.

வவுனியா வைத்தியசாலையில சிகிச்சை பெற்ற 69 பேரும் அவர்களுடன் சென்ற உதவியாளர்கள் 34 பேரும் மீட்கப்படாத பகுதிக்குச் சென்றதாகவும் ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ-3)

# தமிழ் மக்களின் நலனுக்காக முன்னெடுக்கும்

# ஒற்றுமைமுயற்சிகளுக்குநாம்எதிரானவர்களல்ல

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சுமந்திரன் உரை

(தென்மராட்சி)

தமிழ் மக்களிடையே ஒற்றுமை அவசியம். தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகளுக்கிடையில்ஒற்றுமை என்பது முக்கியம். ஆனால்பாராளுமன்றஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக ஏற்படுத்தப்படுகின்ற கூட்டுக்களை ஒற்றுமைக்கானமுயற்சி என நினைத்து தமிழ் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

இவ்வாறு யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் ஈ.பி. ஆர்.எல். எவ் (வரதர் அணியின் முதன்மை வேட்பாளரான தம்பிராஜா சுபத்திரன் நெல்லியடியில் இடம் பெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

வடமராட்சிப் பிரதேச அமைப்பாளர் கே. விக்டர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுபத்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி இதயசுத்தியுடன் முன்னெடுக்கப்படும் நேர்மையான ஒற்றுமைமுயற்சிகளுக்கு நாங்கள் எதிரானவாகள் அல்ல.

மக்களின் கருத்துக்களுக்கு இடமளித்து உருவாக்கப்படும் வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் கூட்டு அமைய வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் குடாநாட்டு மக்கள் அனைவரும்வாக்களித்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முன்வரவேண்டும். இல்லையேல் கள்ளவாக்குகள் அல்லது சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்களிப்பவர் ளே அனைத்து மக்களதும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யும் நிலை தோன்றும் அடுத்த தேர்தல்வரை அவர்களே உங்களது பிரதிநிதிகளாகத் தொழிற்படுவர்.

பதினேழுவருடங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மோசமான வன்முறையை ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு நாட்டு நிலைமையை மோசமாக்கிய யூ என். பி பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறுவதில் உண்மையில்லை.

அத்தகைய நோக்கமிருப்பின் இனப்பிரச்சனைக்குதீர்வு காண்பதை மையமாகக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்த யோசனைக்கு எதிராக ஏன் பாராளுமன்றத்தில் செயற்பட்டது? என்று வினாவெழுப்பினார். (உ-77)

## பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் தரம் 9 இற்கான மாகாண மட்ட பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு 3 கோட்டங்களிலும் உள்ள மதிப்பீட்டு நிலையங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் இடம் பெறும் என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ-10)

## கவிதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜையை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் கவிமாமணி, கவிமணி விருதுகளுக்கான கவிதைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில்பங்கு கொள்வோர் தமது விண்ணப்பத்தை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாககௌரவ செயலாளர், இந்து சமயப் பேரவை-யாழ்ப்பாணம், கைதடி சைவச்சிறுவர் இல்லம் ஏழாலை மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கைதாவோரை

# தடுத்து வைத்து பதிய மத்திய நிலையம் திறப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டம் தேசிய பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் ஆகிய வற்றின் கீழ் கைது செய்யப்படுபவர்களைத் தடுத்து வைத்து உடனடியாகப் பதிவு செய்வதற்கு மத்திய நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

கொழும்பில்உள்ளபொலிஸ் தலைமையகத்தில் இந்த மத்திய நிலையம் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இந் நிலையத்திற்குபொறுப்பாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கொட்டக தெனியா நியமிக்கப் பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், தேசியபாதுகாப்புதடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு ஆறுமணித்தியாலத்திற்கு முன்னர் கைது செய்யும் அதிகாரி மத்தியநிலையத்திற்கு உடனடியாக அறிவிக்க கைது செய்யப்பட்ட நபர் தொடர்பாக அவரது உறவினர்கள் அல்லது நண்பர்கள் இம் மத்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது

## திஸநாயக்காவிற்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் சமுர்த்திஅமைச்சர் எஸ் பி. திஸநாயக்கா மீது சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுச் சம்பந்தமான விசாரணைக்கு எதிர்வரும் 9ம்திகதி லஞ்ச விசாரணைக்குழு முன் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுளளது.

தேர்தல்கடமைகளில் தாம் ஈடுபட்டுளளதால் டிசம்பர் 5ம்திகதிக்குப் பின்னர் விசாரணைக்கான திகதிஒன்றை வழங்குமாறு திணைக்கள ஆணைக்குழுவிடம் கேட்டிருந்தார்.

அவரின் கோரிக்கையை நிராகரித்தஆணைக்குழுஎதிர் வரும் 9ம்திகதி ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

சமுர்த்திநிதியம் தொடர்பாகசமுர்த்தி ஊழியர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து ஆணைக்குழுவின்கீழ் இயங்கும்இரகசியப் பொலிசாரின் முன்சாட்சியம் அளிக்கவே அவர் அழைக்கப்பட்டுள்ளார். (வ)

# முக்கிய இடங்களை தாக்கும் புலிகளின் திட்டம் முறியடிப்பு

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நான்கு இடங்களில் பாரியதாக்குதல்களை மேற் கொள்ள விடுதலைப்புலிகள் தீட்டியிருந்த திட்டம் அம்பலமாகியுள்ளதாக விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி மட்டக்களப்பில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது மேற்கொண்ட படை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருந்தே மேற்படி திட்டம் குறித்த தகவல்கள் தெரியவந்துள்ளதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதிமாளிகை, பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம், திருகோணமலை மற்றும் காங்கேசன் துறை துறைமுகங்கள் மீதே இத்தாக்குதல்கள் நடத்தத்திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவை தொடர்பான வரைபடங்களும்மற்றும் குறிப்புக்கள் பலவும் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

# விழிப்புக்குழுவினால் இளம்யுவதி கைது

[மந்திகை]

ஊரடங்கு வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய யுவதி ஒருவர் விழிப்புக்குழுவினால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் வல்லிபுரக்குறிச்சிக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த31ஆம் திகதி இடம் பெற்றுள் ளது. இமையாணன் கிழக்கைச் சேர்ந்த தேவராசாசுபாஜினி என்பவரேஇவ்வாறு பொலிஸில்ஒப்படைக்கப்பட்டவராவார்.

இந்த யுவதியை கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்தபோது எதிர் வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுளார். (செ-23)

## குறைநிவர்த்தி சேவை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்திபுனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் யாழ் மக்களின்குறைகளை இனம்கண்டு நிவர்த்தி செய்யும் நோக்கில் குறை நிவர்த்திச் சேவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் யாழ்-மத்திய கல்லூரியில் இச் சேவை, காலை 9 மணி முதல் பி.ப 5 மணி வரை இடம் பெறவுள்ளது. (உ-19,9)

## பாலர் பாடசாலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

புனரமைப்புச்செய்யப்பட்ட மூத்த விநாயகர் சன சமூக நிலைய பாலர் பாடசாலை திறப்புவிழாவும், விளையாட்டுப் போட்டியும், இன்று நண்பகல்12.30மணிக்கு நிலைய மைதானத்தில் க.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணி பல்லவ ராஜனும்,

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன். யாழ் கல்வித்திணைக்கள உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி யோகலோகேஸ்வரி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## கட்டுநாயக்கா

# விமானப் படைத்தளம் கிங்கிராக் கொடைக்கு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் அமைந்துளள விமானப் படைத்தளத்தை கிங்கிராக் கொடைக்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுளளது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடை-பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினால் சமர்ப்பிக்கப்பட்ட விமானப் படைத்தள இடமாற்ற பிரேரணைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விமானப் படைதளம் கிங்கிராக் கொடைக்கு மாற்ற முடிவுசெய்யப்பட்டுளளது.

இதேவேளைவிடுதலைப்புலிகளால்கட்டுநாயக்கா விமான படைத்தளம் தாக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# முதன்முறையாக மேற்கிந்தியதீவுகள் அணி இலங்கை வருகை

இலங்கை அணியுடன்மூன்று டெஸ்ட் போட்டிகளிலும மூன்று நாடுகள் பங்கு பற்றும் முக்கோண ஒரு நாள் போட்டித் தொடரிலும விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணி இலங்கை வந்துள்ளது.

முழுமையான டெஸ்ட் தொடர் ஒன்றைவிளையாட மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கை வந்திருப்பதுஇதுவே முதல் தடவையாகும். இதற்கு முன் இரு அணிகளும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மட்டும் கலந்து கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# ஆங்கில படிப்புகள் வட்ட மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆங்கிலப் படிப்புகள் வட்ட மாதாந்தக் கருத்தரங்கு இன்று பி. ப. 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பாடசாலைகளில் ஆங்கில இலக்கியம் கற்பித்தல் சில வழிகாட்டல் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது.

இதில், நாடகம் என்ற விடயத்தில் ஆர். முருகையனும் புனைகதை என்ற விடயத்தில் எஸ். பத்மநாதனும், கவிதை என்ற விடயத்தில் வி. பரந்தாமனும் கருத்துரை வழங்கவுள்ளனர். (உ)

## பிரிட்டனின் ஜனநாயக உரிமையை

# சாதகமாக்கி விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றனர்

## ஜனாதிபதி சந்திரிகா விசனத்தோடு எடுத்துரைப்பு

பிரிட்டனிலுள்ள ஜனநாயக உரிமைகளைத் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பிரிட்டனின் உள்துறை அமைச்சர்டேவிட் பிளங்கெறிடம் ஜனாதிபதி சந்திரிகா விசனம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் திரட்டப்படும் நிதியை, மக்களைக் கொலை செய்யும் கனரக குண்டுகள் துப்பாக்கிகள். தோட்டாக்கள் என்பவற்றை கொள்வனவு செய்து அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுமே பயன்படுத்துகின்றனர்.

நியூயோர்க்கிலோ, லண்டனிலோ அல்லது கொழும்பிலோ பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரே தன்மையான போராட்டத்தையே இலங்கையும் மேற்கொண்டிருக்கிறது.

எனவே இப்போராட்டத்திற்கு பிரிட்டனின் ஆதரவு இன்றியமையாத தென்றும ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (உ-5)

### இன்று ஒரு தகவல்

# அறியாமைதான் வன்முறைக்குக் காரணம்

பல நூற்றாண்டுகளுக்கு முன் அலெக்சாண்டர் போப் மிகப்பெரிய உண்மையினை உள்ளடக்கிய வாக்கியம் ஒன்றினை எழுதினார். அவரது கருத்துரை நவீன வாழ்க்கையின் எல்லா நிலைகளுக்கும் பயன்படக்கூடியது. போப் எழுதினார் 'மிகுந்த அறியாமையில் உள்ளவர்களே மிகுந்த வன்முறையாளர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் இடம் பெறாத கட்சியோ, கோஷ்டியோ, குழுவோ இருந்ததில்லை' வன்முறையாளர்கள் அறியாமையில் உள்ளவர்கள் என்கிற உண்மையினை பரவலாக மக்கள் அறியும்படி செய்தால் அதுவே வன்முறையினையும், வன்முறையினைத் தூண்டுவதையும் தடுக்கின்ற ஒன்றாக ஆகிவிடும்.

அறியாமையில் உள்ளவர்கள்தான் வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டுவிட்டால் அதைச் சமாளிக்க நம்மைத் தயார்படுத்திக் கொள்வது சிறப்பான முறையில் அமையும். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் கல்வி அறிவை ஏற்படுத்த இது தூண்டுகோலாகவும் இருக்கும். கல்வி எந்த அளவுக்கு வளர்கிறதோ அந்த அளவுக்கு வன்முறைக்கான காரணங்களும் குறைந்து போகும். வன்முறையில் கல்வியின் பங்கு என்ன என்பதை மிகுந்த கவனத்துடன் நாம் ஆராயவேண்டும். பல சந்தர்ப்பங்களில் கல்வி அறிவு படைத்தவர்கள் அறியாமையில் உள்ள மக்களை வன்முறைக்குத் தூண்டுகிறார்கள். வன்முறையைத் தேர்ந்தெடுக்கிறவர்கள் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அறியாமையில் உள்ள மக்களையே தேடிப் பிடிக்கிறார்கள்.

வரலாற்றில் நிகழ்ந்த கலவரங்களுக்கும் புரட்சிகளுக்கும் கல்விபடைத்த சமுதாயத்திடமிருந்தே தலைமை கிடைத்திருக்கிறது வன்முறைகளில் ஈடுபடுவதற்கான மக்கள் சக்தி சமுதாயத்தில் உள்ள அறியாமையிலுழலும் மக்களிடமிருந்தே கிடைத்திருக்கிறது. கல்வியின் தரம் உயர்ந்து, அது எல்லா மக்களுக்கும் பரவும்போது, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதும் குறைந்து போகும். பிரச்சினைகளைத் தீர்ப்பதுதான் வாழ்க்கை என்கின்ற விளையாட்டின் முக்கிய பகுதியாகும். பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எத்தனையோ சிறந்த வழிகள் இருக்கின்றன. தனிநபர்களின் குழுக்கள், தேசியக் குழுக்கள், சர்வதேசக் குழுக்கள் ஆகியவை உட்கார்ந்து பேசி, வன்முறைகள் இல்லாமலேயே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும், இந்த வழியில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதற்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. நிர்ப்பந்தம் எதிர்ப்பை உருவாக்குகிறது, வன்முறை என்பது நிர்ப்பந்தத்தின் உச்சக்கட்டமாகும். ஆகவே அதற்கு ஏற்படுகின்ற எதிர்ப்பு கடுமையாகவேயிருக்கும். வன்முறையை வன்முறையால் எதிர்க்கின்ற நிலைமையும் தோன்றலாம், இவ்வாறு வன்முறை வன்முறையை வளர்த்துக் கொண்டே போகிறது

இதை எப்படி நிறுத்துவது? அறியாமையே வன்முறைக்குக் காரணமாக அமைகிறது. அறியாமையைக் கல்வியின் மூலமாகத்தான் போக்கமுடியும், அந்தக்காரியத்தை நாம உடனடியாகச் செய்யவேண்டும். ஏனெனில் இப்போதுள்ள வன்முறைப் போக்குகள் நம்மை அழித்துவிடுகிற சக்தியுடன் செயல்பட்டு வருகின்றன வன்முறை பயமுறுத்தல் என்பது அறியாமையை ஒப்புக்கொள்ளுவதன் அடையாளம் என்பதை முதலிலே நாம் சொல்லிக் கொடுக்கவேண்டும். அதை ஒப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டால் வன்முறை ஒழிப்பில் ஒரு அடி முன்னேறிவிட்டதாக அர்த்தம்.

டாக்டர் எம். ஆர். காப்மேயர்

காணாமற் போனோர் பெற்றோர் சங்கம்

# யாழ். செயலகம் முன்பாக நாளை மறியற் போரில் குதிக்க முடிவு

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகம் முன் நாளை திங்கட்கிழமை மறியற்போரில் குதிக்க திட்டவட்டமாக முடிவெடுத்துள்ளதாக கைதாகி காணாமற் போனோர் பெற்றோர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 1996, 1997 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் கைதாகி காணாமற் போனோர் தொடர்பாக இதுவரை எந்தவொரு உறுதியான தகவல்களோ முடிவுகளோ சம்பந்தப்பட்ட தரப்புகளால் வழங்கப்படாமையைக் கண்டித்து நடத்தப்படும் இப்போராட்டத்திற்கு பல்வேறுபட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் ஆதரவும் தமக்கு கிடைத்திருப்பதாகவும்.

இப் போராட்டத்திற்கு ஏனையோரின் ஆதரவை வேண்டி நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

மேற்படி மறியற் போர் சுழற்சி முறையில் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் மேற் கொள்ள உத்தேசித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இடமாற்றம்

(துன்னாலை)

வடமாட்சிப் பிரதேச மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய றோகன் சஞ்சேறாயுஇம் மாத ஆரம்பம முதல் திருகோணமலை மதுவரித் திணைக்கள சிரேஷ்ட பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார் (உ-41)

## யாழ். நகரில் சன நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரில் சன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கால விற்பனையில் வியாபாரிகளும் கொள்வனவில் மக்களும் மும்முரமாக ஈடுபட்டுள்ளதையும் காணமுடிகின்றது. (செ-104)

## ஆற்றுகை வெளிவரும்

(ஈச்சமோட்டை)

யாழ் திருமறைக்கலாமன்ற நாடகப்பயிலகத்தினரால் வெளியிடப்படும் ஆற்றுகை நாடகஅரங்கியலுக்கான சஞ்சிகையின்புதியஇதழ் இவ்வாரத்தில் வெளிவரவுள்ளது.

இந்த சஞ்சிகையில், தன்னைத்தன் னால் அறிதல் அரங்கு. யாழ்ப்பாணம் கத்தோலிக்கநாட்டுக்கூத்துமரபு, நினைவுகளாகிப் போன கரவெட்டி நற்குணம், சர்வதேச அரங்கை எதிர்கொள்ளும் சுதேசிய அரங்குகள், சுமைத்தணிவுப்பணியில் மரதத்தடி அரங்கு' நவீன அரங்கு பீற்றர் ப்றூக் போன்றகட்டுரைகளும்' முகில்களின்நடுவே, என்ற நாடகமும் மற்றும் பல அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (உ-59)

## பிரியாவிடையும் வரவேற்பும்

[கொழும்பு]

கொழும்புத்துறை பழைய பங்குத்தந்தைக்கு பிரியாவிடை வைபவமும், புதிய பங்குத் தந்தையின் வரவேற்பு வைபவமும் கடந்த ஞாயிறன்று கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் நடைபெற்றது. (உ-223)

## திருட்டு முயற்சி 'முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

மது வெறியர் போல நடித்து, மக்களை ஏமாற்றி திருடப்பார்த்த ஆசாமிகளை துரத்தியடித்த சம்பவம் கடந்த வியாழனன்று சச்சேரியடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இரவு 10.00 மணியளவில் தள்ளாடியபடி வந்த சிலர், தமக்கு தங்குவதற்கு இடம் தருமாறு கேட்டதாகவும், அவர்களைத் துருவித் துருவி விசாரித்த போது பயத்தால் ஓட்டம் பிடித்ததாகவும், சில மணிநேரத்தின் பின்னர், அவ்விடத்திலுள்ள வேறோர் வீட்டில் திருட முயன்ற போது மக்கள் கூக்குரலிடவே அவர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிய

## நெருப்புக் காய்ச்சல் பரவும் அபாயம்

(ஆனைக்கோட்டை)

கொக்குவில் மேற்கு வாரி அம்மன் கோவில் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அப்பகுதி பொது சுகாதார உத்தியோகத்தர் எச்சரித்துள்ளார்.

மேற்சொன்ன நோய் அறிகுறிகொண்ட 20 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதன்பேரில் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுவதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. (உ-201)

## 60 ஆவது அகவை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் முன்னாள் உப தலைவர் அமரர் ஆறுமுகம் மகாலிங்கத்தின் 60 ஆவது ஆண்டு அகவை விழா எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஏழாலை மேற்கு சத்திய பவனில் அமைந்துள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பேரவையின்தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பியின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் ஞாபகார்த்த உரையை நிகழ்த்துவார். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, ஜ. கோ. சந்திரசேகரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (எ)

## சலரோக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ்கழகங்கள் மாவட்டம் 306 பீ நடத்தும் சலரோகக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மாவட்ட தலைவர்லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

'சலரோகத்துடன் நன்றான வாழ்வு' என்ற தலைப்பில் மருத்துவ பீட மாணவர்களின் கருத்துரையும்'

தொடர்ந்து சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆதரவுடன் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன. (உ)

## துரையப்பா வி. அ. பகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

துரையப்பா விளையாட்டு அரங்கப்பகுதியில் உடல்வலு பயிற்சிக்கான மண்டபம அமைப்பதற்கு யாழ்நீதிமன்ற நீதிபதி இ.த விக்னராஜா அனுமதி வழங்கியுள்ளார்.

பெரும் மனிதப் புதைகுழி இருப்பதாக கருதப்படும யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கப் பகுதியில் உடல் வலுப்பயிற்சிக்கான மண்டபம அமைப்பதற்கு வடக்கு-கிழக்கு விளையாட்டு அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தி அப்பகுதியில் மேற்படி கட்டடம் அமைக்க முன்னர் அனுமதி மறுக்கப்பட்ட போதும் விளையாட்டுத்துறைஅதிகாரி ஏ.ஜே ரூபசிங்கத்தின் விடாமுயற்சியின்பயனாக இது கைகூடியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9 30 மணிக்கு நீதிபதி விக்னராஜா மேலதிக அரச அதிபர் து வைத்திலிங்கம் மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கம் சட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீராஜேஸ்வரன் விளையாட்டுத்துறை அதிகாரியான ஏ.ஜே ரூபசிங்கம் ஆகியோர்துரையப்பா விளையாட்டு அரங்கப்பகுதிக்குசென்று இடத்தினை பார்வையிட்ட பின், புதைகுழி இருக்கும் இடத்தில் இருந்து 20M தூரத்திற்கு அப்பால் இக் கட்டடம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக் கட்டடம் கட்டும் பணி எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இப்பணி நடைபெறும் போது மனித எச்சங்கள் எதுவும் தென்பட்டால் உடன் இப்பணியை நிறுத்து மாறும் உத்தரவிடப் பட்டுள்ளது. (உ-10)

தேர்தல் கண்காணிப்பு

# பொது நலவாய நாடுகள் அமைப்பு நிராகரிப்பு

(கொழும்பு)

அடுத்தமாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு பொதுநல வாய நாடுகள் அமைப்பிற்கு விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய நாடுகள் அமைப்பு, ஐக்கிய நாட்டு சபை, இந்திய தேர்தல் அமைப்பு, நேபாள ஏ.ஏ.ஈ. அமைப்பு ஆகியவற்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் ஐரோப்பிய யூனியன் மாத்திரமே ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்துள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## நத்தைகள் பெருக்கம் விவசாயிகள் கலக்கம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிதோட்ட நிலங்களில் நத்தைகளினால் பெருநாசம் ஏற்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தோட்ட நிலங்களில்பல்கிப் பெருகியுள்ள நத்தைகள் இரவுவேளைகளில் பயிர்களின் இலைகள் முழுவதையும் உண்பதனால் விடிந்ததும் அங்கு செல்லும் விவசாயிகள் பெரிதும் ஏமாற்றமுறுவதும்,

இதனால் விவசாய முயற்சியைக் கைவிடும்நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

கத்தியால் குத்தி

## கடமையில் இருந்த வைத்தியர் கொலை

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையொன்றின் வைத்தியர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரவு 7 மணியளவில் கடமையில் இருந்த வேளையில் மு. நவரட்ணம் என்ற வைத்தியரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது கொலைக்கு அரசியல் பின்னணி காரணமாய் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ-7)

## சிந்தனைக்கு விருந்து

### மூத்தவர் தாழ்வர்

ஐம்பதிரு பத்தைக்தென் றான சதமெல்லாம்
வெப்புகனி போல்மதிப்பில் வீழ்ந்தனவே-அம்புவியில்
வாழுகின்ற மாந்தர் வலுவிழந்து மூத்திட்டால்
தாழுகின்ற தன்னவே யாம்.

'பழையவன்'

# மனித உயர் குணங்களை வெளிக் கொணரும் கல்வியே இன்றைய இளைஞர்களுக்கு அவசியம்

இன்று திருநெல்வேலி சாயிசமித்தியில் வட பிராந்திய சத்திய சாயி இளைஞர் பிரிவால் இளைஞர் தினம் கொண்டாடப்படுகிறது. அதையொட்டி இளைஞர் பற்றிய பகவான் பாபாவின் தெய்வீக உரையிலிருந்து சில பகுதிகள் தொகுத்து வெளியிடப்படுகின்றன.

பகவான்பாபா இளைஞர்களை நோக்கி 'நீங்கள் தெரு விளக்குகள் ஆகுங்கள். தெரு நாய்களாக அல்ல' என்று கூறுகின்றார். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதால் அவர்களை தற்கால உலகியல் கல்வியிலிருந்து விடுபட்டு உண்மையான கல்வி முறையை போதிக்கும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுமாறு புட்ட பர்த்தியில் நடந்த அகில உலக குருமார் மகாநாட்டில் அவர் அருளுரை வழங்கியுள்ளார்.

இன்று உலகம் விஞ்ஞான ரீதியாக அணுஆயுத கணனி யுகத்தில் உள்ளது. இக் கல்வியின் விளைவு வீட்டில் சச்சரவு, நாட்டில் அமைதியின்மை உலகம்பாதாளத்தை நோக்கி செல்கின்றது. நாளை நடப்பதை யாரறிவார்? கிரகங்கள் கூட இயற்கைக்கு கட்டுப்பட்டு அவை ஒரு ஒழுங்கு முறையில் சுற்றுகின்றன.

நாங்களோ இயற்கையை மதியாமல், பஞ்ச பூதங்களை மதியாமல் நடப்பதால் உலகில் எத்தனையோ அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இவற்றை இளைஞர்கள்மூலம் நடைமுறை ரீதியில் தடுக்க முடியும் என பகவான் பாபா திட்டவட்டமாகக் கூறுகிறார்.

உள்ளிருக்கும் மனித உயர் குணங்களை வெளிக் கொணர்வதால் மாத்திரம் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி எம்முள்ளே சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு மனிதனிலும் உயர்குணங்கள் இருக்கின்றன அம் மனித உயர் குணங்களான சத்தியம் தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பனவற்றை எமது நாளாந்த வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

## நல்லூரான்

கல்வி என்பது வாழ்க்கைக்காகத்தானே தவிர உயிர் வாழ அல்ல என்பதை நாங்கள் நன்கு உணர வேண்டும். கல்வியறிவு இல்லாமல் மிருகங்கள் பறவைகள், மற்றும் உயிரினங்களும் உயிர் வாழ்கின்றன ஆகவே எல்லோரும் கல்வி வாழ்க்கைக்குத் தானே என்பதை நன்கு புரிந்து கொள்ளுதல் அவசியம் என்று கூறும் பாபா, இளைஞர்களே நீங்கள் எத்தொழிலைச் செய்தாலும் எந்தச் சூழ் நிலையிலும் சத்தியத்தை கடைப்பிடியுங்கள். தர்ம வழியில் செல்லுங்கள். எல்லோரிடமும் தன்னலமற்ற அன்பைப் பகிருங்கள் எந்தச் சூழ்நிலையிலும் எவருக்கும் மனம், வாக்கு, காயத்தால் தீங்கை விளைவிக்காதீர்கள் உங்கள் கைகள் பிரதிபலனை எதிர் பாராத சேவை செய்யட்டும்.

• நீங்கள் தெய்வத்தின் வானத்திலே தாரகைகள், தெய்வத்தின் தோட்டத்திலேமலர்ந்த பூக்கள் உங்கள் வாழ்வு தான் என் செய்தி. உங்கள் பழக்கவழக்கம் ஒழுக்கம் நடத்தை அடக்கம் ஆகியவற்றால் என்னை அறியச் செய்யுங்கள். நீங்கள் எந்தச் சாதி எந்த மதத்தைச் சேர்ந்தாலும் நீங்கள் எல்லாம் என்னுடையவர்களே. நீங்கள் சார்ந்த மதத்தின் கொள்கைகளை பின் பற்றி உதாரண புருஷர்களாக விளங்குங்கள் கடவுளின் கருணையில் விசுவாசம் வையுங்கள். உங்களது உண்மையான பிரார்த்தனையால் இறைவனைச் சுலபமாக அடையலாம் என்று உறுதிபடச் சொன்னார்.

---

# இராசி பலன்

4-11-2001

ஐப்பசி 18 ஞாயிறு

திருதியை மு. ப. 11-51 வரை
ரோகினி மு. ப. 11-05வரை
இராகுகாலம் 4-34- - 6-04
சுபநேரம் 9-04 - 10-34
சங்கட சதுர்த்திவிரதம்

### மேடம்
சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி தாமதம், அபகீர்த்தி, வியாதி

### இடபம்
சிநேகிதர் உதவி, நல்ல முயற்சி, வாக்குபலிதம், சயனசுகம்

### மிதுனம்
பிரயாணம், நல்ல செலவு, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம்

### கடகம்
நினைத்தகாரியம்கைகூடும், தெய்வதரிசனம், மதிக்கப்படல், பொருள் சேர்க்கை

### சிங்கம்
அதிகாரம், நல்லசெய்தி கடினமுயற்சி, உற்சாகம்

### கன்னி
பெரியோர் மதிப்பு, வீண் பயம், கடுமையான முயற்சி, புதிய தொழிற்சிந்தை

### துலாம்
உறவினர் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், கடன்பிரச்சினை, போசனசுகம்.

### விருச்சிகம்
சென்ற இடத்தில்செல்வாக்கு, தனவரவு, போசனசுகம், முயற்சிகைகூடும்

### தனுசு
லட்சுமிகரம், ஆரோக்கியம் சந்தோசமான சம்பவம், காரியநன்மை.

### மகரம்
குடும்பக்கவலை, தொழில் நன்மை, முயற்சி தாமதம், வியாதி

### கும்பம்
நிலைமாற்றம், நன்னம்பிக்கை குறைவு, காரியதாமதம், உடல் வியாதி

### மீனம்
இனிய சம்பவம், நல்ல முயற்சி, அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

---

# அறுவரைக் கொன்ற புலியைக்கொல்ல உத்தரவு

[காட்மண்டு]

நேபாளத்தின் றோயல் சிட்டன் தேசிய சரணாலய பகுதியில் கடந்த ஒரு கிழமையில் மாத்திரம் ஆறுபேரைக் கொன்ற வங்காளப் புலியைச் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உலகில் மிகவும் அரிதான புலி இனத்தை சேர்ந்ததாக இது இருந்தாலும் அறுவரைக் கொன்று வேறு நால்வரைக் காயப்படுத்தி அட்டகாசம் செய்து வருவதால் அதனை சுட்டுக் கொல்வதற்கு உள்துறை அமைச்சு அனுமதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகில் ஒரு இலட்சம் இருந்த வங்காளப் புலிகளின் எண்ணிக்கை, இப்போது 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரையில் குறைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது

[உ-2]

# ஊழல் வழக்கு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

(சென்னை)

செல்விஜெ லலிதா மீதான ரான்ஸி நில பேரஊழல் வழக்குத் தீர்ப்பு நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

நிலபேர வழக்குத் தொடர்பான தீர்ப்பை எதிர்த்து போடப்பட்ட மனு கடந்த 17 நாட்களாகச் சென்னை உச்சநீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இதன் பேரில் நீதிபதி ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை நிறுத்தி வைத்துள்ளார்

உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞர் கே. கே. வேணுகோபால் செல்வி ஜெய்லலிதா சார்பில் வாதிட்டார்.

(து)

# ஆப்கான் மக்களுக்கு விநியோகிக்கும் உணவு பொதியின் நிறம் மாற்றம்

(வாஷிங்டன்)

விமானம் மூலம் ஆப்கான் மக்களுக்கு போடும் உணவுப் பொருள் பொதியின் நிறத்தை நீல நிறமாக மாற்றுவது குறித்து அமரிக்கா எடுத்த தீர்மானம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதலால் பாதிப்புற்ற ஆப்கானிய மக்களுக்கு அமெரிக்கா இது வரை விநியோகித்த நிவாரணப் பொதியின் நிறம் மஞ்சள் நிறத்தால் ஆனதாக இருந்தது.

கடந்த சில வாரங்களாக விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகளும் மஞ்சள் நிறமாக காணப்படுவதால் உணவுப் பொதிக்கும் குண்டுகளுக்கும் வித்தியாசம் தெரியாத ஆப்கான் மக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகி வருவதை தவிர்க்கும் வகையிலேயே இவ்வாறு பொதியின் நிறம் மாற்றப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

(உ-7)

# அமெரிக்கா மீது தாக்கும் தீவிரவாதிகள் தீட்டிய இரகசியதிட்டங்கள் கசிவு

[வாஷிங்டன்]

அமெரிக்காவின் சங்கிலிப் பாலத்தை தாக்குவதற்குதீவிரவாதிகள் திட்டம்தீட்டி வருவதாக கலிபோர்னியக் கவர்னர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய இடங்களைத் தீவிரவாதிகள் தாக்கவுள்ளதாக தனக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து அது பற்றிய தகவல்களை புலனாய்வுப் பிரிவினர் மூலம் தான் பெற்றுக் கொண்டதாகவும்,

அத்தகவலின் படி உல்லாசப் பயணிகளின் மூலம்வருமானத் மாக விளங்கும் தொங்குபாலம் தாக்கப்படவுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததாகவும் கவர்னர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இத்தாக்குதல் இம்மாதம் 7 ஆம் திகதி அளவில் இடம் பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டவர்கள் பலர் புலனாய்வுப் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் எனத்தெரியவ

# சிறுவர்கள் மீட்டெடுத்த தங்கப் புதையல்

(சென்னை)

தமிழ்நாடு பூந்தமல்லி அருகே தங்கப் புதையல்ஒன்று சிறுவர்களால் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள பழமை வாய்ந்த ஒட்டை மண்டப விநாயகர் கோவில் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அப்பகுதியில்பந்து போன்ற வடிவமைப்புடைய செப்பினாலான பொருள் ஒன்றை மீட்டெடுத்து தட்டி விளையாடியதாகவும்,

அவ்வேளை அது உடைந்து அதனுள்ளிருந்த பண்டைக் கால நாணயங்களும் தங்க நகைகளும் சிதறியதாகவும் தெரியவந்துள்ளது.

இப்புதையல் தற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளது.

(உ-2)

# அந்திரெக்ஸ் கிருமி பரவ அமெரிக்க தீவிரவாத அமைப்புகளே காரணம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவை உலுக்கும் அந்திரெக்ஸ் கிருமி அச்சுறுத்தலின் பின்னணியில் அமெரிக்காவிலுள்ள சில தீவிரவாத இயக்கங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெயர் குறிப்பிடவிரும்பாத அமெரிக்கப் புலனாய்வு நிறுவனம் ஒன்றை மேற்கோள் காட்டி வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது

அந்திரெக்ஸ் கிருமியை வெண்ணிறத் தூளில் கலந்து அனுப்பியவர்கள் உள் நாட்டில்வசிக்கும் அமெரிக்கர்களே என்றும், இக் கிருமிகளை அமெரிக்க ஆய்வு கூடங்களில் உருவாக்கியிருக்கலாமென்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கிருமியினால் அமெரிக்காவில் மூவர் பலியாகியமையும் 12 ற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

இதேவேளை, அந்திரெக்ஸ் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவில் 14 பேர்கைது செய்யப்பட்டும், 5 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 5)

# கோழித்திருடன் அகப்பட்டான்

(அளவெட்டி)

பட்டப்பகலில் திருட்டுத்தனமாக கோழி பிடித்தவர் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் கடந்த வெள்ளியன்று சுன்னாகம் சந்தரோடைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

களவாக கோழி பிடித்துக் கொண்டிருந்த மூவரை அவதானித்த வீட்டார், வர்களைத் துரத்திச் சென்றதாகவும் அவர்களில் ஒருவர் அகப்பட்டதன் பேரில் தற்போது பொலிஸார்வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய

# முதியவர் தற்கொலை

(துன்னாலை)

கரவெட்டி மத்தி கிழவி தோட்டம் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் 70 வயதுடைய ஆறுமுகம் கார்த்திகேசு என்பவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த வியாழன் காலை 7.00 மணியளவில் இச் சம்பவம் தெரியவந்துள்ளது தற்கொலை செய்து கொண்டவர் 7 பிள்ளைகளுக்கு தந்தையாவார்.

அவரால் எழுதப்பட்ட கடிதம் உடுத்தியிருந்த சாரத்திற்கிடையில் இடுப்பில் செருகப் பட்டிருந்தது. அக்கடிதத்தில் தனக்கு தாங்கமுடியாதவருத்தம் உடலில் இருப்பதால் தானேதனது சாவைத் தீர்மானித்ததாகவும் மனைவியுடனோ, பிள்ளைகளுடனோ தனக்கு எத்தகைய பிரச்சினையும்இல்லைஎன்றும்குறிப்பிடப்

# பசுமாடு மிதிவெடியில்

(கோப்பாய்)

தோட்ட நிலத்தின் ஊடாகச் செல்லும் இராணுவ வேலிக்கு அருகாமையில் மேயக்கட்டியபசுமாடொன்று மிதிவெடியில் முன்னங்காலை இழந்த சம்பவம் கோப்பாய் மத்தி அடிச்சேரிப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது. இப்பகுதியைச் சேர்ந்த சு.வீரக்கதி என்பவருடைய மாடே இவ்வாறு அகப்பட்டுக் கொண்டது.

(எ-79)

## ஆண்டின்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டவர்கள் நேசம் இவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். தொழில் துறையில் இவர்கள் தனிப்பட்ட முறையில் ஈடுபடுவது நல்லது. கூட்டுத் தொழில் இவர்களுக்கு அவ்வளவு நல்லதல்ல. திருமணம்கூட சிறிய வயதில் செய்து கொள்ளாமல். பொறுத்துசெய்துகொள்வது நல்லது. சந்திர வீட்டினர் நீர்சம்பந்தமான எல்லா வியாதிகளாலும் பீடிக்கப்படக் கூடியவர்கள், சீதபேதி, மூச்சுப்பையில் நீர்தங்குதல் ஆகிய வியாதிகளைப்பற்றி இவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

வஞ்ச மனத்தான் படிற்றொ
-ழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் கிளிப்பிள்ளைப் பேச்சு

சமாதானப் பேச்சுக்கான கதவு திறந்தே இருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு இன்று நேற்று கூறப்பட்டதல்ல. என்று ஆட்சிபீடமேறமுற்பட்டாரோ அன்று முதல் இன்றுவரை சமாதானப் பேச்சுக்கான கதவு திறந்திருப்பதாகவே கூறுகிறார். வெறும் வார்த்தை ஜாலங்களால் யுத்தத்தையோ-உயிரிழப்புக்களையோ நிறுத்திவிட முடியாது. ஆனால் கிளிப்பிள்ளை போன்று கூறியது - கூறுவதிலேயே ஜனாதிபதி காலம் கழித்துள்ளார். ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு முன்னர் தேர்தல் பிரசாரங்களில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்தி ஆறு மாதங்களுக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவேனென்று கூறிய ஜனாதிபதி சந்திரிகாவால் ஆறுவருடங்கள் கடந்தும் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியவில்லை.

மாறாக மக்கள் கொடுத்த வாக்குப்பலத்தை - சந்தர்ப்பத்தை போட்டுடைத்ததாகக் கதை முடிந்து விட்டது. ஜனாதிபதி சந்திரிகாவிடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டிருப்பின்பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் ஒரு வருட ஆயுளோடு அஸ்தமித்திருக்காது. அதுமட்டுமன்றிஅரசியல் கௌரவத்தை இழந்து ஜே.வி.பியின் காலடியில் மண்டியிட்டிருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிராது. இப்போது யாரைத்தான் சிக்கனப் பிடித்தாலும் இடியப்பச் சிக்கலாக இலங்கையின் அரசியலும், ஆட்சியும் கோலம் பூண்டுவிட்டது. இந்நிலையிலிருந்து நாட்-டை மீட்டெடுக்கவேண்டுமாயின் மேடைபோட்டு வாய்ச் சம்பிரதாயங்கள் பேசிப் பயனில்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாயின்- நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமாயின் அதற்கு செய்ய வேண்டிய ஒரே ஒரு விடயம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சை ஆரம்பிப்பதேயாகும். எந்த ஊரில்- எந்த நாட்டில் உரக்கப்பேசினாலும் மேற்போந்த முடிவை யாராலும் மாற்ற முடியாது. இதனை ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்துச் சிங்களத்தலைவர்களும் உணர்ந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

---

### பரமபிதா காட்டிய பாதை

# இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகள் எமக்கு கலங்கரை தீபமாக நல்வழி காட்டுகின்றன



விண்ணகமிருந்து மண்ணகம் வந்த இறைமகன் இயேசு மண்ணோர் பாவங்களை மன்னித்து மீட்புக் கொடுக்கவே பரம தந்தையால் அனுப்பப்பட்டார். ''நீர் எல்லாம் வல்லவராக இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகிறீர்'', மனிதர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பும் பொருட்டே நீர் அவற்றைப் பார்த்தும் பாராமல் இருக்கிறீர். படைப்புகள் அனைத்தின் மீதும் நீர் அன்புகூர்கிறீர். (சா. ஞா. 11:23,24) இறைவன் எவரையும் தன்னிடம் வரும் போது அவனுடைய குற்றத்தையோ பாவங்களையோ பொருட்படுத்துவதில்லை. தன்னை விட்டுப் பிரிந்து சாத்தானின் செயல்களில் கட்டுண்டவனை அன்பினால் ஈர்க்கவே ஆவலாக உள்ளார்.

**சாந்தியின்றி ஏங்குகின்றனர்**

ஆனால், மானிடர்கள் தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களை மன்னிப்பதில்லை. பழிக்குப் பழிவாங்குவதையே நாம் காணுகின்றோம். தம்மை இறைவன் மன்னிக்க வேண்டும். அவர்களால் பிறரை மன்னிக்க முடியாது. இதனாலே போர்களும், வன்முறைகளும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொய்யும், புரட்டும், களவுகளும் மலிந்து காணப்படுகின்றன யுத்தத்தின் சத்தங்கள் நித்தம் முழங்கியே பித்தர்களாகிவிட்ட மனிதர்கள் அமைதியையும், சாந்திசமாதானத்தையும் தேடி ஏங்குகின்றார்கள்.

**அன்ரனி பீற்றர்**

மனிதமனத்திலே நிம்மதியற்ற நிலை தோன்றும் போது தம்மிலும் மேலான ஒருவரிடம் தமது பிரச்சினைகளைச் சொல்லி அதற்கு பரிகாரம் காணும் போது தம்மேல் ஏற்றிவைத்திருந்த சுமைகளையெல்லாம் இறக்கி விட்டு மன அமைதி பெறுகின்றார்கள். இஸ்ராயேல் மக்களிடம் வரி அறவிட்டுப் பணி செய்த சக்கேயு என்றகுள்ள மனிதன் இயேசு அவ்வழியால் வருகிறார் என்ற செய்தியைக் கேட்டு அவ்வழியில் உள்ள அத்திமரத்தில் ஏறி இயேசுவைக் காண ஆவல் கொண்டார். இயேசுவும் அவனைக் கண்டார். அவனை அழைத்து உன்வீட்டில் விருந்து உண்ண வருகின்றேன் என்றார். பாவியான சக்கேயு மகிழ்ச்சியடைந்து, தனது பிழைகளையெல்லாம் அறிக்கையிட்டு தான் முறையின்றி வசூலித்தவற்றையெல்லாம் நான்கு மடங்காகத் திருப்பிக்கொடுப்பதாக வக்கு பண்ணுகின்றான். அவன் திருந்தியமனிதனாய் மாறுகின்றான்.

**உள்ளம் நிறைவு கொள்வதில்லை**

நாங்கள் கடினமுள்ளவர்களாக மற்றவர்களை மன்னிக்க முடியாதவர்களாகவும் ஆனால் வெளியிலே தூய்மையாளர்களாகக் காட்டிக் கொள்ள முற்படுகின்றோம். கீழ்ப்படிவு இல்லாதவர்களாக அடுத்தவர் பிழைகளைச் சுட்டிக்காட்டி நீதிமான்களாக நடிக்கின்றோம். காலத்தைப் பகைத்துக்கொண்டு காற்றில் பறக்க விளைகின்றோம். நீதிக்கு தலைவணங்காது அநீதிகளுக்கு ஆமாப் போடுகின்றோம் எம்மை நாமே ஏமாற்றி எமக்குள் போலிச் சமாதானத்தை வளர்த்துக் கொள்ளுகின்றோம். அதனாலே எமது உள்ளம் நிறைவு காண்பதில்லை.

இழந்துபோனதைத் தேடி மீட்கவே மீட்பராக இயேசு வந்தார். அவ்வாறு நாமும் மீட்படையும்போது வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சக்கேயு மீட்படைந்ததால் அவனது இல்லத்திலே மகிழ்ச்சி உண்டானது எப்பொழுது எமது உள்ளங்களிலும் மகிழ்ச்சிக்கான வழிகள் பிறக்கின்றதோ நாம் மற்றவர்களை எம்மிலும் மேலானவர்களாக ஏற்றுக் கொள்வோம், பகிர்ந்துவாழ்வோம். இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகள் எமக்கு மேல்வரிச் சட்டமாக உள்ளன; அவ்வார்த்தைகள் எம் பாதைக்கு வெளிச்சமாகவும், எம்மை கரைசேர்க்கும் கலங்கரைத்தீபமாகவும் மீட்புக்கு வழியாகவும் உள்ளன. இறைவார்த்தையின்படி வாழ்ந்து மீட்பின் பாதையைக் கண்டடைவோம், வாழ்வடைவோம்.

---

### சோதிட பலன்

# ஆண்டின் பன்னிரண்டுகாலப் பகுதியினுட் பிறந்த ஜாதகர்களின் குணாதிசயங்களும், பலனும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**சூரிய வீட்டின் பலன்**

ஜாதகர்கள் 'ஜூலை, 21 லிருநது ஆகஸ்டு 20க்குள' ஒரளவு 28 ந் தேதிக்குள் பிறநதவர்களாக இருந்தால் சூரிய வீட்டினர். புகழ் மக்களின நன்மதிப்பு ஆகியவையும், மக்களால் பாராட்டப் பெறுதலில் பெருவிருப்பும் கொண்டவர்கள். அழகுணர்ச்சியும், கலையுணர்வும இவர்கள் பிறவிக்குணம். கலைத்துறையில்மேம்பாடடையாவிடினும் தங்கள் வீட்டினையேனும அழகானதாக தோட்டததின்மததியில் ரம்மியமானதாகக் கட்ட விருப்பம் கொள்ளும் சுபாவமுடையவர்கள்.

தீவிர குணமும், பெருமையும் கொண்டவர்கள ஆனதால்இவர்களுக்குப்பலவிரோதிகள ஏற்படுவார்கள, பொதுவாக இவர்கள் அரசியல வாழ்க்கையில் ஈடுபடுவார்கள மற்றவர்களுக்குஉதவுவதைத் தவிர மற்றவர்களிடம் உதவி கேட்பது இவர்களுக்கு ஒவ்வாத விஷயம். தங்கள் நண்பர்களுக்காகக் கடைசிவரை போராடுவது இவர்களது பண்பு. வேண்டியவர்களை அளவுக்கு மீறி விருப்புதலும் பிடிக்காதவர்களை அளவுக்கு மீறி வெறுத்தலும் இவர்களது குணாதிசயம்.

**வராகமிஹிரர்**

மற்றவர்களிடம் மிகுந்த அனுதாபம் உடையவர்கள். ஆனால் வெளிக்காட்டினால் தாங்கள் ஏமாற்றப்படுவோம் என்று எண்ணுவார்கள். என்றாலும் வாழக்கையில் இவர்களது அனுதாப குணத்தினால் மிகவும் ஏமாற்றப்படுவார்கள். சூரியனது மறைவின் போது இருள் சூழ்ந்து கொள்வது போன்று இவர்களது கடைசிக்காலத்தில் பல விதமான துயரங்கள் இவர்களை ஆட்கொள்வதுசகஜம். தங்களது நல்ல காலததின் போது பெரும்பான்மையான மக்களுக்கு மகிழ்ச்சியையும நன்மையையும், உதவியையும் அளித்த இவர்களது அந்திம காலத்தின்போது உதவுபவர்கள் மிகவும் அரிது. முடிவு காலத்தின் போது தான் ஏமாற்றுபவர்களும், விரோதிகளும் இவர்களுககு அதிகமாவார்கள. பொருள பெருக்கும் பதவியுயர்வுகளும், அரசியல் ஈடுபாடுகளும, அழகுணர்ச்சியும், மக்கள செல்வாக்கும் இவர்களுக்குண்டு.

இவர்களுக்கு வரக்கூடிய வியாதிகள், இதயம், தலை, நோவுகள், காதுக்கோளாறுகள், கண்கள், மூத்திரகோசங்களில் வீக்கமும ஏற்படுவதுண்டு.

**சந்திர வீட்டின் பலன்கள்**

'ஜூன்மாதம் 21 ந் தேதியிலிருநது ஜூலை 20 ந்தேதி வரை பிறந்த ஜாதகர்கள், கற்பனை, கலைத்துறை, காதல், கவிதை, பயணங்கள், இயற்கைக்காட்சிகள ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர்களாக இருப்பார்கள். தங்களுடைய கற்பனைத் திறமையினால் புதுமாதிரியான விஷயங்களில் ஆராய்ச்சியும், நாட்டமும் கொண்டவர்கள். வியாபாரத் துறையில் கூட புதுமையான முறையில் லாபத்தை அடைவார்கள். ஆனால் சூதாடுவதில் பிரியமுள்ளவர்கள் இந்தசூதாடும்உணர்ச்சி இவர்கள் வியாபாரத்திலேயே இவர்களுக்கு ஏற்பட்டால் ஆச்சரியபபடுவதற்கில்லை. ஆனால் பெரும்பாலும் இவர்களுக்கு ஏற்படககூடியது வெற்றியே! மிகப் பெரிய வியாபாரிகளும், தொழில அதிபர்களும சநதிர வீட்டு ஜாதகர்களில உண்டு.

எதிலும் புதுமை எண்ணம் கொண்டவர்கள். உலகம் முழுதும் சுற்ற வேண்டும் என்ற ஆர்வம கொண்டவர்கள. பிரயாணங்களில் சலிப்படையவே மாட்டார்கள். மாறுதலகளை இவர்கள விரும்புவதுபோல, மாறுதல்கள இவர்கள் வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படும். உயர்வும தாழ்வும் இவர்கள்வாழ்க்கையில் குறுக்கிடுவது இயல்பு. ஆனால்துன்பம் வந்தகாலத்து இவர்கள சோர்வடையமாட்டார்கள்.

ஆராய்ச்சியாளர், கலைஞர்கள், இசைவல்லுநர்கள், இசை அமைப்பாளர்கள் ஆகியோரில் பெரும்பாலோர். சந்திர வீட்டினைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள. ஆனால் சூட்சும சக்திகளில் இவர்கள் அதிக நாட்டம கொள்ளுவார்கள. சந்திரன் உலக விஷயங்கள் பலவற்றில் மாறுதல் ஏற்படுத்துவது தெரிந்ததே. அமாவாசையன்றும, பூரணையன்றும் கடல் கொந்தளிபபது நாம் அறிந்தது. அதேபோன்று வானததில் சந்திரன் வளரும் போது சந்திர வீட்டினரது சக்தி அதிகமாவதும், குறைவடையுமபோது சகதியும், அதிர்ஷ்டமும் குறைவதும் நிச்சயம. எனவே முககியமான காரியங்களை இவர்கள் வளர்பிறையின் போது கைக்கொள்ளவேண்டும்.

இவர்கள் சார்ந்தார் வண்ணமாகும் குணமுடையவர்கள். நல்ல நண்பர்களோடு இவர்களசேரவேண்டும். கெட்

[6-ம் பக்கம் பார்க்க]

---

## தினசரி தியானம்

### ஊழ்

வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே:

-திருமந்திரம்

உடலில் வசித்திருக்கும் பொழுதும் உடல உணர்வு இல்லாதவன் ஆவேனாக.

அறையில் உள்ள குளிரோ, வெப்பமோ, குப்பையோ குடியிருப்பவனால் உணரப்படுகிறது. ஊழை முன்னிட்டு உடலுக்கு வரும் நலம், கேடுகளை ஆத்மா உணருகின்றது. ஆனால் அவைகளை உணராதிருந்து பழக வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## பாரிய வெடிச்சத்தம் கேட்ட போது

# எனக்கருகில் நின்ற இருவரும் கீழே வீழ்ந்தனர்!

## மரண விசாரணையில் சாட்சியம்

(ஏழாலை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த 30 ஆம் திகதி தாக்குதலுக்கு இலக்கான எல். எம். எஸ்: துன்கிந்த கப்பல் மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றை ஏற்றிக் கொண்டு வரும்போதே தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததாக தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட கடற்படையினரின் மரண விசாரணையின் போது மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்குறித்த சப்பலின் பாதுகாப்புப் பிரிவு தலைமை அலுவலர் சூலசிங்க கேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து 5;45 மணிக்கு காங்கேசன் துறை நோக்கி புறப்பட்டது.

என்னுடன் சேர்த்து 16 கடற்படை வீரர்களும் 11 சிவில் அலுவலர்களும் இருந்தனர். அந்த கப்பல் 30 ஆம் திகதி பிற்பகல் பருத்தித்துறை கடற் பிரதேசத்தில் வந்து கொண்டிருந்த வேளை பருத்தித்துறை கடற்கரையிலிருந்து ஏறத்தாழ 15 கிலோ மீற்றர் தூரத்தில் ஆழ்கடலில் வந்து கொண்டிருந்த போது 6 சிறு படகுகள் எமது கப்பலை நோக்கி வந்தன.

எங்கள் கப்பலிலிருந்து ஏறத்தாழ 100 மீற்றர் தொலைவில் அப்படகுகள் வந்து கொண்டிருந்த போது அப்படகுகளில் வந்தவர்கள் எமது கப்பலை நோக்கி சுட ஆரம்பித்தார்கள.

அப்போது நான்காங்கேசன் துறை கடற்படை தளத்துச்கு ரேடியோ மூலம் தகவல் அனுப்பினேன். அதன் பின் எமது கப்பலில் இருந்த கடற்படை வீரர்கள் அப்படகுகளை நோக்கி சுட ஆரம்பித்தனர்.

அவ் வேளை. குறித்த 6 படகுகளில் ஒன்று மிக வேகமாக வந்து எமது கப்பலுடன் மோதியது. அச் சிறிய படகு கப்பலுடன் மோதியவுடன் பாரிய வெடிச் சத்தம் கேட்டது.

எனினும் கப்பல் சேதம் அடையவில்லை. பாரியவெடிச் சத்தம் கேட்டவுடன் நெருப்பும் கருமண்டலம் போன்ற புகையும கிளம்பியது அப்போது கப்பலின் மேற்பக்கத்தில் எனக்கு மிக அருகில் நின்ற 2 கடற்படையினர் இறந்து வீழ்ந்தனர் எனவும் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

இதே வேளை, இத்தாக்குதல் சம்பவத்தில் புங்குடுதீவு கடற்படைத் தளத்தைச் சேர்ந்த ஜே எம். ஏ எம். ஜெயசிங்க ஊர்காவற்துறை கடற்படை த்தளத்தைசேர்ந்த ஜீ. எம். எஸ். பண்டார மண்டைதீவு கடற்படைத் தளத்தைசேர்ந்த கே ஏ.எஸ் வேறசுல ஆகிய மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் 24பேர் காயமடைந்ததாகவும் அதில் 13 பேர் கடற்படையினர் எனவும் 11 பேர் கப்பலில் கடமையாற்று பவர்கள் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-12)

## இறுதிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தயா நகைப் பூங்காவின் அனுசரணையுடன் கோப்பாய் வானவில் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் ஒருமணிக்கு கழகத் தலைவர் சோ. விஜயரூபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நீர்வேலிப் பிரதேசசபைத்தலைவர் பூ. குணசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [ந]

## மின்சார சபைக்கு 2000 கோடிரூபா நட்டம்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக இருந்து வரும் மின்வெட்டினால் இலங்கை மின்சார சபைக்கு 2000 கோடி ரூபா நட்டமேற்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபைக்கு ஏற்பட்டுள்ள இந்த நட்டம் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றுமாதங்களாக இலங்கை மின்சார சபை மின் வெட்டை நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்கனவே 500 கோடி ரூபாவையிழந்திருந்தது. இத்துடன் மேலும் 2000 கோடி ரூபா நட்டமேற்பட்டுள்ளதாக மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார். (வ)

## மிதிவெடியில் சிக்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தனது வீட்டைப் பார்க்கச் சென்ற நபர் ஒருவர்மிதிவெடியில் சிக்கி உயிரிழந்த பரிதாபச் சம்பவமொன்று சாவகச்சேரி கல்வயல் பகுதியில்இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த நாகமுத்து சின்னத்துரை (வயது-47) என்பவரே மேற்படி பரிதாபகரமாக உயிரிழந்தவராவர். [ந-4]

## இலவச சீருடை

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு பாலர் பாடசாலைக்கு புதிய வருடத்தில் அனுமதிக்கப்படவுள்ள 135 சிறார்களுக்கு நாளையதினம் இலவசச் சீருடை வழங்கப்படவுள்ளது.

சாவல்கட்டு கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் பி.ப. 1 00 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதே வேளை, இவர்களுக்கு சத்துணவுத் திட்டமுமஜன வரி முதல் அமுல்படுத்தப் படவுள்ளது. (உ-201)

## வெடிப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கடந்த புதனன்று சாவகச்சேரிப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர்: 81 மி. மீ. மோட்டார் குண்டுகள் - 2, ஆர் பி ஜி குண்டுகள் - 2, 60 மி.மீ. மோட்டார் குண்டு - 1, கிரனைட்-1 என்பவற்றை மீட்டுள்ளனர். (உ)

## 850வாகன இலக்கதகடுகள் கப்பலில்எடுத்துவரப்பட்டன!

யாழ் மாவட்டத்தில் 850 புதிய வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள்கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் முதல் இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரை யாழ் மாவட்ட போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 850 வாகனங்களுக்கே இவ்விலக்கத் தகடுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்விலக்கத்தகடுகள் யாழ் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இம்மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாக திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்காலிக வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களும் இம்மாதம் 2ம் திகதி முதல் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## விமானப்படைத்தளத்தை உடன் மாற்ற முடியாது!

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்துடன் அமைந்துள்ள விமானப் படைத்தளத்தை உடனடியாக மாற்றமுடியாதென விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானப்படைத்தளத்தை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளபோதும் விமானப்படை அதிகாரிகள் விமானத்தளத்தை தற்போது மாற்றுவதற்கு முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமானப் படைமுகாம்சுமார்மூவாயிரம் பேரைக்கொண்ட பொலிஸ் முகாமாக இருப்பதால் நினைத்தவுடனே ஹிங்கிராக் கொடைக்கு மாற்ற முடியாதிருப்பதாகவும் அவர்கள தெரிவித்துள்ளனர். (வ)

### புலிகளின் ...

அல்லது நிவாரணமோ அரசாங்கத்தினால் இன்னமும் வழங்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளால் தனக்கு அச்சுறுத்தல் உள்ளமை காரணமாக வழங்கப் பட்ட பாதுகாப்பும் தற்போதுநீக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அண்மைக்கால நடவடிக்கையினால் படையினருக்கும் நெருக்குதல் ஏற்பட்டதென்றும், சரத்முனசிங்க தெரிவித்தார்

1988, 1989ம் ஆண்டுகளில் இலங்கையின் கொலை வெறியர்கள் எனக்கருதப்பட்ட ஜே வி. பியினருடன் இணைந்து பணிபுரிய மனச்சாட்சி இடமகொடுக்கவில்லை. இதன் காரணமாகவே பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து தான் விலகியதாகவும, இந்நடவடிக்கைக்காக அரசு கெடுதல் புரிய முனைந்தால் அவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கத் தயாராகவுள்ளதாகவும் சரத் முனசிங்க தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ந-4)

### ரணிலுக்கு

முறைபபாடடில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் முறைப்பாட்டில் இது தொடர்பான விசாரணைகளை விசேட நீதி மன்றம் ஒன்றில் நடத்த வேண்டும் மெனறும் இதனை மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் விசாரணைசெய்து. தீர்ப்பு வழங்கவேண்டு மெனவும் கேட்கபபட்டுள்ளது.

இம் முறைப் பாட்டில் குறறவாளிகளாக எதிர் கட்சித் தலைவர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் விக்கிரம சிங்க உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-4)

### ஜே. வி. பி.

கடந்த வாரம் லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவை லண்டனில் சந்தித்துப் பேசியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (வ)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏகவினியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி1986)

### முக்கிய ...

எந்நேரமும் எங்கும் எதுவும் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பில் அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

கொழும்பில் நாரஹென்பிட்டியாபொறளை, கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, கொம்பனித்தெரு, முகத்துவாரம், புறக்கோட்டை, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளில் பொலிசார் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதும் சந்தேகத்திற்கிடமான எவரும் கைதாகவில்லை

விடுதலைப்புலிகளின் தற்கொலையாளிகள் நகருக்குள் பரவலாக ஊடுருவி இருப்பதால் அவர்களின் மறைவிடங்களைக் கண்டறிவதில் பொலிசாரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் கூட்டாக இணைந்து நேரகாலம் குறிப்பிடாது திடீர் சுற்றிவளைப்புக்களை மேற் கொண்டும் வீதியில் செல்லும் வாகனங்களை மறித்துச் சோதனைகளை மேற் கொள்வதிலும் ஈடுபட்டுள்ளனர். இதில்இராணுவமும் இணைந்து செயற்படுவதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு நாரஹென்பிட்டியில்பிரதமா ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படவிருந்த தற்கொலைத் தாக்குதல் சூத்திரதரிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி தீவிரமடைந்துள்ள போதும் இது வரை எவரும் கைதாகவில்லை என நாரஹென் பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தயானந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்கொலைக் குண்டுதாரிகள் பாவிப்பதற்கு என நகருக்குள் கொண்டு வரப்பட்டுள்ள தற்கொலை அங்கிகள கிராண்பாஸ் ஸ்ரேடியம் பகுதியில் உள்ள குப்பைத் தொட்டியில்இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ள தற்கொலைப் படையணியில் பெண்போராளிகளும் இடம் பெற்றிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. [ம]

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் படுகாயம்

(திருநெல்வேலி)

ஊர்காவற்துறையில் உள்ள ஈ. பி. டி. பி. முகாமொன்றில் நேற்று முற்பகல் ஏற்பட்ட துப்பாக்கி வெடி விபத்தில் அக் கட்சி உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

ஆ. கண்ணதாசன் வயது 28 என்றஈ.பி.டி.பி உறுப்பினரே படு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (ந-43-4)

### தேர்தல்

றன.

இத்தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் கிழக்கிலும் மோசமாக ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

240 முறைப்பாடுகளில் நேற்றுமட்டும் 10 முறைப்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சியும் 25 முறைப்பாடுகளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் 5முறைபபாடுகளை ஜே. வி.பியும் செய்துள்ளன. [வ

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டைவீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளானந்தம்வரப்பிரகாசம் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## மிதிவெடியில் சிக்கி 7 பேர் காயம்

(கொழும்பு)

கடந்த மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் இம் மாதம் முதலாம் திகதி வரையான 7 நாட்களில் பொதுமக்கள் தரப்பில் இருவரும், படையினர் தரப்பில் ஐவரும் மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்ததாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.